**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4640

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 23.10.2021

Accepted: 23.12.2021

Published: 01.01.2022

Citation:
Sangeetha, T., and K. Jagadeesh. "National Education Policy-2020: An Emphasis on Education through Mother Tongue" *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 3, 2022, pp. 151–57.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4640

*Corresponding Author:
sangeetha@curaj.ac.in

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# National Education Policy-2020: An Emphasis on Education through Mother Tongue

**Dr. T. Sangeetha**
*Assistant Professor, Department of Education*
*Central University of Rajasthan, Rajasthan*

**Dr. K. Jagadeesh**
*Guest Lecturer, Department of Education*
*University of Madras, Tamilnadu, India*

**Abstract -** Education is the basic tool to develop society. The aims of education are closely related to the needs of society. Education paves way for the students to make desirable changes with the goals of the community. Through education, social preferences and cultural traditions are passed down from one generation to the other. Benjamin Bloom categorizes learning goals into three domains. The first of these is the cognitive domain. In this domain, he has given the second place for understanding. Understanding is an essential event in the teaching-learning process. The national education policy 2020 emphasis on learning through mother tongue would make the student understand the concepts and content in a better way. This article sheds light on the need for mother-tongue Tamil language as a medium of instruction for the better understanding of the learner which is emphasized in the National Education policy 2020.

**Keywords:** Education, Blooms Taxonomy, Understanding, Mother-Tongue, NEP-2020.

**References**

1. Chinnasamy, K. Sirajunissa Begum S. 2014. *A Study on Usage of Internet resources Among the Engineering Students in Madurai District*. Journal of Modern Science. Nov, Vl.6-No.2.
2. Desta Bokre et al., 2006. *Elementary Education in Eritrea: How Mother Tongue Language Policy Affects Pupils and Their Access to Information* DOI: 10.1177/095574900601800204
3. Govindarajan. 1990. *Purpose and Method of Practicing Tamil*, Chennai, Saraswati Publishing. .
4. John W. Best, James V Kahn. 2014. *Research in Education.,* Tenth Edition., PHI Learning Private Limited., New Delhi.
5. Mangal, S.K. 2008. *Statistics in Psychology and Education*. PHI publications, New Delhi.
6. Mangal/ S.K. 2012. *Essentials of Educational Technology*, PHI publications, New Delhi.
7. Ministry of Human Resource Development. 2020. *National Education Policy, Retrieved* at: https://www.mhrd.gov.in/sites/upload_files/mhrd/files/nep/English1.pdf
8. Muhammedali Tn. 2021. *National Education Policy 2020*: Some reflections: https://www.researchgate.net/publication/352197063
9. Nabel Abedalaziz, Shahrir Jamaluddin, Chin Hai Leng. 2013. Measuring Attitudes toward computer and internet usage among postgraduate students in Malaysia. Turkish Online Journal of Educational Technology. April, vol 12 Issue 2.

10. Narendra Modi. 2020. *School Education in the 21st Century under NEP 2020 Conclave*. Retrieved at: https://www.narendramodi.in/primeminister-narendra-modi-addresses-school-education-in-21st-centuryunder-nep-2020-conclave-551349
11. National Education Policy. 2020. Ministry of Education, Government of India.
12. Paul Devanesan. P, Selvan. A. 2012.*Utilization of online programs by Teachers*. Edutracks. Nov, Vol.12-No3.
13. Pramod K. Jail, Shamsher Singh Singh, Prashant Babaji et. al., 2014. *Knowledge and attitude about computer and internet usage among dental students in Western Rajasthan*, India. Journal of International Society of Preventive & Community Dentisry. Jan-Apr4(1): 29-34.
14. Pratibha Bundela Gupta et al., 2021. National Education Policy 2020 – Roles and Competency Framework for Academic Leaders, International Conference on Best Innovative Teaching Strategies (ICON-BITS), 29-31 July 2021, Pilani, Rajasthan, India Paper ID: 23 Page 1
15. Radha Mohan. 2013. Innovative Science Teaching. , PHI publications, New Delhi.
16. Rathinasabapathy. 2008. Academic Exam, Chennai, Santa Publishing.
17. Sakthivel. 1964. History of Tamil Language, Chennai, Meenakshi Library.
18. Sidhant Mohanty et al., 2021. National Education Policy 2020-Opportunities And Challenges https://www.researchgate.net/publication/357555509
19. Uma Maheswari. K. Samma Reddy. P. 2010. *Assessment of ICT Literacy*. Edutracks. Oct,Vol.10-No2.
20. Vajravelu. 2009. *Arunthamil teaching methods*. Chennai, Amsa Publishing.
21. Venugopal E.P. and Santhakumari. K. 2012. *Teaching of Tamil*, Chennai, Saradha Publications.
22. Venugopal. 1991. *Painthamil Teaching Methods*, Vellore, Shakuntala Publishing House.
23. Venugopal. 2021. *Teaching Biology*, Chennai, Iram Publishing.

# தாய்மொழி வழிக்கல்வியை வலியுறுத்தும் தேசியக் கல்விக்கொள்கை 2020

***முனைவர் தி. சங்கீதா***
உதவிப் பேராசிரியர், கல்வியல் துறை
இராஜஸ்தான் மத்தியப் பல்கலைக்கழகம், இராஜஸ்தான்

***முனைவர் கு. ஜெகதீஸ்***
கௌரவ விரிவுரையாளர், கல்வியியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***
*கல்வி என்பது சமுதாயத்தை மேம்படுத்துவதற்கான ஒரு அடிப்படை கருவியாகும். கல்வியின் நோக்கங்கள் சமுதாயத் தேவைகளோடு தொடர்புடைதாக இருக்கின்றன. கல்வி சமுதாயத்தின் தேலைகளுக்கேற்ப மாணவர்களிடம் விரும்பத்தக்க மாற்றங்களை ஏற்படுத்த வழிவகை செய்கிறது. கல்வியின் வாயிலாக சமுக நடத்தை தேசிய விருப்பங்கள், கலாச்சாரப் பாரம்பரியங்கள் ஆகியன புரிதல் என்பது கற்றல்- கற்பித்தல் செயல்பாடுகளில் இன்றியமையாத நிகழ்வாகும். இந்நிகழ்வினைச் தேசியக்கல்விக் கொள்கை 2020 மூலம் வலியுறுத்துகிறது. இக்கட்டுரை மூலம் தாய்மொழி மூலம் கற்பதனால் ஏற்படும் நன்மைகளையும். அதனை வலியுறுத்தும் கொள்ளைகளையும் காண விழைகிறோம்.*
***முக்கியச் சொற்கள்:*** *கல்வி, தாய்மொழிக் கல்வி, கல்விக் கொள்கை.*

## முன்னுரை

தாய் என்பவள் தன் குழந்தையைப் பிறந்தது முதல் சீராட்டிப் பாராட்டி வளர்க்கும் மொழி தாய்மொழி. குழந்தை தாயிடமும் குடும்பத்தினரிடமும் உரையாடி மகிழும் மொழி தாய்மொழி. அமிழ்தம் உண்டாரை மகிழ்விப்பதோடு நீண்ட காலம் வாழ்விக்கும். குழந்தை தாயிடம் பேசிப் பழகும் மொழியாம் தாய்மொழியும் நெடிய செம்மாந்த வாழ்வு வாழ வைக்கும் என்பது அங்கை நெல்லிக்கனி. தாய்மொழி வழிக் கல்வியை உண்மையான கல்வி. பிற மொழி வழிக் கல்வி நடைமுறைக்குப் பொருந்தாத கல்வி ஆகும். தாய்மொழி வழிக் கல்வி இயற்கையானது. பிறமொழி வழிக் கல்வி செயற்கையானது.

## தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம்

தாய்மொழிக் கல்வி தாய்ப்பால் போன்றது. தாய்மொழியின் வாயிலாகச் சிந்தனை. செயல், படைப்பாற்றல் ஆகியன நடைபெறுகின்றன. கருத்தை விரைவாகவும், நிறைவாகவும் புரிந்து கொள்ள தாய்மொழியே பயன்படுகிறது.

1. கருத்துக்களையும், எண்ணங்களையும் மற்றும் விருப்பு, வெறுப்புகளையும் வெளியிட தாய்மொழியே பெரிதும் பயன்படுகிறது. உலகில் பிறந்த ஒவ்வொருவரும் தம் தாய்மொழியில் கற்பதே இயற்கை.
2. இயல்பாகப் பொருளுணரும் திறன் தாய்மொழி மூலமே நடைபெறும்.
3. மொழியின் திறன்களும், நயங்களும், உலகியல் நடைமுறைகளும் எளிதாக அறிந்துகொள்வதற்குத் தமிழ் வழியில்

கற்பிப்பதாலும். கற்பதாலும் பல்வேறு பொது நோக்கங்கள் நிறைவடைகின்றன.

4. தமிழ் மொழியானது சீரிளமைத் திறத்தோடும், செயல்திறனோடும் விளங்குகிறது என்பார் சுந்தரம்பிள்ளை. இளமைத்திறனும், செயல்திறனும் பெறுவதற்குக் காரணம் அதன் நோக்கங்களும் பயன்களுமே ஆகும்.

## தமிழ் மொழி கற்பித்தலின் நோக்கங்கள்

1. பள்ளிப் பாடப்பொருளில் தாய்மொழி பெருமிடத்தை விளக்குதல்.
2. எண்ணத்தை வெளியிடும் கருவியாகத் திகழ்கிறது. அடிப்படையாற்றலையும் தருகிறது.
3. கற்பனையாற்றலையும், படைப்பாற்றலையும் வளர்க்கிறது, அழகுணர் ஆற்றலை அறிய முடிகிறது.
4. சமூகப் பண்பாட்டினையும். சமூக மரபினையும் அளித்தல்.
5. சமூகக் கடமைகளை மேற்கொள்ள வழிகாட்டுகிறது.
6. வாழ்வை நடத்தத் தேவையான திறன்களைப் பெறவும் நீதிகளையும், விழுமங்களையும் கற்பிக்கவும் தாய்மொழி பயன்படுகிறது.

எண்ணங்கள் எத்தனையோ நிலைகளில் வெளிப்படுகின்றன. சில நேரங்களில் சாதாரணக் கருத்துக்களாக வெளி வருகின்றன; சிலநேரங்களில் ஆய்வுக் கருத்துக்களாக வெளிவருகின்றன; சிலநேரங்களில் உணர்ச்சிகளாக வெளிவருகின்றன; சிலநேரங்களில் நயமுள்ள தொடராக வெளிவருகின்றன. இவை அனைத்திற்கும் தேவை மொழித் திறன் ஆகும். இதை வள்ளுவர் சொல்வன்மை என்ற அதிகாரத்தில்.

> **“விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்”**

எனக் கூறுகிறார். இத்தகைய திறனைப் பெற தாய்மொழிப் பயிற்சி மிகவும் இன்றியமையாதது. தாய்மொழி சொற்தொகுதிகளை ஏற்ற இடங்களில் பயன்படுத்தவும். பட்டறிவை வெளிப் படுத்தவும். அவற்றைப் பயன்படுத்துவோர் வெற்றி பெறவும் சிறந்த துணையாக அமைகிறது.

## கலைத்திட்டத்தில் மொழியின் இடம்

தாய் என்பவள் தன் குழந்தைக்கு தாய்ப்பாலை மட்டும் புகட்டுவதில்லை அறிவு என்னும் பாலையும் புகட்டுகிறாள். அவள் தன் சிந்தனையின் விளைவே அறிவு எனும் பால் ஆகும். அவள் ஊட்டிய சிந்தனை தாய்மொழியின் மூலமும் மிளிரும்.

சங்கத் தமிழரும், அதற்கு முந்தய தமிழரும் சிந்தித்து, தமிழர் வாழ்வு சிறக்க வேண்டும் என எண்ணினர். அச்சிந்தனையின் வெளிப்பாடே பல்வேறு சங்க நூல்களாகும். அவர்கள் கண்ட வாழ்வியல் உண்மைகளை விட்டுச் சென்றுள்ளனர். வாழ்வியல் உண்மைகள் கற்பனை கலந்து அறிவுப் பெட்டகமாகக் காட்சி அளிப்பது தாய்மொழியாம் தமிழில் தான்.

தாய்மொழி அறிவு பிற துறை அறிவுக்கும், தரமான கல்வி மேம்பாட்டிற்கும் பெரிதும் துணையாய் அமைகிறது; பண்பாட்டு வளர்ச்சிக்குப் பக்க பலமாக அமைகிறது.

1. தாய்மொழியின் தரமான வளர்ச்சிக்கு அடித்தளமாகவும், ஆரம்பமாகவும் அமைவது பள்ளி.
2. கல்வியானது அகப் பண்புகளையும், புறப் பண்புகளையும் வளர்க்கும் கருவி. தாய்மொழிக் கல்வி இதில் பெரும்பங்கு வகிக்கிறது.
3. கலைத்திட்டம் என்பது பாடப்பொருள் மட்டும் அன்று; பாடப்பொருள்

தொடர்புடைய கருத்துக்கள், வகுப்பறை அனுபவம், பள்ளிச் செயல்பாடுகள், பள்ளி அனுபவம் அனைத்தும் கலந்த கலவை. அந்தக் கலவையைச் சிறப்புற வழங்குவதில் தாய்மொழி முதலிடம் பெறுகிறது.

4. தாய்மொழியானது, மொழி சார்ந்த திறன்களையும் அறிவுச் சார்ந்த திறன்களையும் பண்பாடு சார்ந்த திறன்களையும் வளர்ப்பதில் முக்கிய பங்கினை வகிக்கிறது


மாணவனின் மனவளர்ச்சி வாழ்வுக்கு அடிப்படை, மனவளர்ச்சியை தாய்மொழியின் மூலமே ஆரம்பக் கல்வியில் வழங்கப்படுகிறது. மனிதனை அறிவியல், தொழிலியல், பொருளியல், ஆன்மீகவியல், பகுத்தறிவுச் சிந்தனை இயல் என அனைத்து நிலைகளும் செம்மையாக வளர வழிவகுப்பது கலைத்திட்டத்தில் முதன்மை இடம்பெறும் தாய்மொழிக் கல்வியாகும்.

### ப்ளூமின் கல்வி நோக்கங்களின் வகைப்பாடு

பெஞ்சமின் எஸ்.புளூம் என்பவரும் அவருடன் சேர்ந்து பணியாற்றியவர்களும் ஒன்று சேர்ந்து 1948ல் அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் அமெரிக்க உளவியல் கழகக் கூட்டம் ஒன்றை நடத்தி. கற்பித்தல் நோக்கங்களைப் பற்றி சில முடிவுகளை எடுத்தனர். அதில் முக்கியமான நோக்கங்கள் என்பவை வரையறுக்க்கூடிய விளக்க்கூடிய, உற்று நோக்கக்கூடிய, பயிற்சி பெறக்கூடிய, மதிப்பிடக்கூடிய நடத்தைக் கோலங்களாக வெளியிடப்பட வேண்டும் என்பதாகும்.

அதனடிப்படையில் அவர்கள் கல்வி நோக்கங்களை மூன்று பெரும் தொகுதிகளாகப் பிரித்தனர். அதில் அறிவும் அதனைச் சார்ந்த செயல்களும் உள்ளடக்கிய தொகுதியை "அறிதல் தொகுதி" என்றும், மதிப்பு, பாராட்டு, மனப்பான்மை போன்ற உணர்வுகளை உள்ளடக்கிய தொகுதியை "உணர்தல் தொகுதி" என்றும், உடலுறுப்புக்களின் இயக்கங்களை உள்ளடக்கிய தொகுதியை உள-உடலியக்கத் தொகுதி என்றும் பிரித்தனர்.

மேலும், அறிதல் தொகுதியில் கீழ்க்கண்ட ஆறு பிரிவுகள் கீழ்நிலையிலிருந்து மேல்நோக்கி வரிசைக் கிரமமாக அமைக்கப்பட்டுள்ளன. அவையாவன, அறிவு பெறுதல், புரிந்து கொள்ளுதல், பயன்படுத்துதல், பகுத்தல், தொகுத்தல், மதிப்பிடல் உட்படுத்தி நினைவு படுத்துதல், புரிந்து கொள்ளுதல், பயன்படுத்துதல், பகுத்தல், மதிப்பிடுதல், உருவாக்குதல் என வகைப்படுத்துகின்றனர்.




இவற்றுள் முதல் இரண்டு பிரிவு களான நினைவுப்படுத்துதல், புரிந்து கொள்ளுதல் ஆகியவை கற்றல்-கற்பித்தல் நிகழ்வில் மிகவும் இன்றியமையாத செயல்முறைகள். இச்செயல்முறைகளை மாணவர்களும், ஆசிரியர்களும் எளிதில் நிகழ்த்துவதற்குத் தாய்மொழியால் மட்டுமே சாத்தியம்.

### தாய்மொழிக் கல்வியை வலியுறுத்தும் தேசியக்கல்விக் கொள்கை 2020

தேசியக்கல்விக் கல்விக் கொள்கை நன்கு பகுதிப் பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது. இவற்றுள் பகுதி பள்ளிக் கல்வி ஆகும். இப்பகுதி எட்டு இயல்களை உள்ளடக்கி உள்ளது. இவற்றுள் நான்காவது இயலானது பன்மொழித்தன்மையும் மொழியாற்றலும் என்ற தலைப்பின்கீழ் தாய்மொழிக் கல்வியைச் சுட்டிக்காட்டுகிறது.

இக்கல்விக் கொள்கையானது 4.11 முதல் 4.22 வரை உள்ள இயல்களில் மும்மொழிக் கல்விக் கொள்கைகளையும் வலியுறுத்துகிறது. அவற்றுள் தாய்மொழி வழிக் கல்வியும் அடங்கும். தேசியக்கல்விக் கல்விக் கொள்கையில் இடம்பெற்றுள்ள மொழிக் கல்வியின் அம்சங்கள் பின்வருமாறு;

1. தாய்மொழி / வீட்டு மொழி / உள்ளூர் மொழியை 8-ம் வகுப்புக்கும் அதற்கு மேலும் இயலும் இடத்திலெல்லாம் கற்பிக்கப்படும் ஒரு மொழியாகத் தொடரப்பட வேண்டும்.
2. அறிவியல் உள்ளடங்கலாக உயர்தரப் பாடப்புத்தகங்கள், வீட்டு மொழியில் / தாய்மொழியில் கிடைக்கத்தக்கதாகச் செய்யப்படும்.
3. அரசியலமைப்பின் எட்டாம் இணைப்புப் பட்டியலில் இடம்பெற்ற அனைத்து மொழிகளையும் பெரும் எண்ணிக்கையில் ஆசிரியர்களை பணியமர்த்த மாபெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் ஒரு மாநிலம் மற்றொன்றிலிருந்து ஆசிரியர்களை பணியமர்த்த இருதரப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளலாம்.
4. மும்மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படும். மூன்று மொழிகளில் குறைந்தது இரு இந்திய நாட்டு மொழிகளாக இருக்க மாணவர்கள் விருப்பத்துடன் தேர்ந்தெடுப்பவையாக இருக்கும். மாற்ற விரும்புவர்கள் 6-7 வகுப்பில் அவ்வாறு செய்யலாம்.
5. தாய்மொழிகளில் அறிவியல்/ கணிதம் கற்க இரு மொழிகளில் புத்தகங்கள் மற்றும் கற்றல் கற்பித்தல் துணைக்கருவிகள் தயாரிக்க முயற்சிகள் செய்யப்படும்.
6. இந்திய மொழிகள், இயக்கியங்கள் மீது விழிப்புணர்வுகள் கொண்டிருக்க வேண்டும்.

இக்கொள்கையானது, கற்பித்தல் நோக்கங்களான புளூமின் நோக்கங்களை முன்மொழிந்து தாய்மொழி வழிக்கல்வியை வலியுறுத்துகிறது. என தாய்மொழியாம் தமிழில் கல்வியைக் கற்பதன் மூலம் பல்வேறு வளர்ச்சியையும், சமுதாய மேம்பாட்டினையும், வளர்ந்துவரும் நாடுகளின் பட்டியலில் இருந்து வளர்ந்த நாடுகளின் பட்டியலுக்கு இந்திய நாட்டினைக் கொண்டுச்செல்ல முடியும் என்பதில் ஐயமில்லை.

**தாய்மொழியாம் தமிழ் வழிக் கற்பதால் ஏற்படும் பயன்கள்**

தாய்மொழியால் சிந்தனை வெளிப்படுகிறது; காலத்தைக் கடந்து என்றும் பயன்படும் எழுத்துப் பதிவைக் கொண்டது; இதற்குத் தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும் சான்று. தாய்மொழியில் மட்டுமே உயர்ந்த கருத்துக்களைச் சிறந்த சொற்களைக்கொண்டு உணர்த்திட முடியும். விழுமிய கருத்துக்களை செஞ்சொற்களால் உயர்நடையில் கூறமுடியும். நமது தாய்மொழியான தமிழைக் கல்வியியல் துறையில் ஆரம்பக் கல்வியில் கட்டாயப் பாடமாக கற்க-கற்பிக்க வழிவகை செய்தல் வேண்டும். இதன் மூலம், வருங்கால மாணவர்கள் கீழ்க்கண்ட நலன்களைப் பெற வழிவகை ஏற்படும்.

1. தமிழ் வழிக்கல்வி மூலம், மாணவர்கள் பாடப்பொருளின் கருத்துக்களை எளிதில் புரிந்துகொள்ள முடியும்.
2. கற்ற பாடப்பொருளை எளிதில் நினைவுகொள்ள முடியும்.
3. மதிப்பெண்களுக்காகக் கல்விக் கற்பதனை தவிர்த்து, சமுதாயத்திற்கு கற்ற கல்வியை பயன்படுத்தும் அறிவைப் பெறுவர்.
4. புரிந்துகொண்ட பாடக்கருத்துக்களை வைத்துப் படைப்பாற்றல் திறனை அடைய முயற்சி செய்வர்,

5. அவரவர் பாடத்தில் சிறந்தவர்களாக விளங்குவர்,
6. புதிய சிந்தனைகளையும், புதிய வகை ஆராய்சிகளிலும் ஈடுபடுவர்.
7. விழுமங்களோடு சமுதாயத்தில் ஏற்படும் பிரச்சனைக்குத் தீர்வுகான முற்படுவர்.
8. அனைத்துத் துறை சார்ந்த செய்திகளை அறிந்து கொள்ள முற்படுவர்,
9. பல்வேறு துறை சார்ந்த நுட்பங்களை வைத்துப் புதுவகை நுட்பங்களை உருவாக்க முயல்வர்.
10. கற்கும் திறனை அதிகரிக்கச் செய்கிறது.
11. தன்னம்பிக்கையை கூடுகிறது, பேச்சாற்றல் வளர்கிறது; ஆக்கத்திறன் கூடுகிறது.

## முடிவுரை

தாய்மொழிப் பிறந்தது முதல் வாழ்வின் முடிவு வரை தாயோடும், மற்றவர்களோடும் கலந்து உறவாடப் பயன்படும் மொழியாகும். வையத்துள் வாழ்வாங்கு வாழவும், புகழ் வாழ்வு வாழவும் தாய்மொழிக் கல்வி என்பது இன்றையத் தேவையாக உள்ளது. தாய்மொழி மனிதனை வளர்க்கவும், உருவாகவும், சீரமைக்கவும் செய்யும். தாய்மொழிக் கல்வியும், தாய்மொழி மூலம் பெரும் கல்வியும் 21 நூற்றாண்டிற்கு தேவையான ஒன்றாக உள்ளது. வருங்கால சமுதாயத்தினரை படைப்பாற்றல் மிக்கவராகவும், பாடப்பொருளில் திறமை மிக்கவராகவும் உருவாக்க வேண்டுமெனில், தாய்மொழியாம் தமிழை கற்றல்-கற்பித்தலுக்கு முதன்மை மொழியாகப் பயன்படுத்த வேண்டும். இச்செயல்முறையால் கல்வியியல் துறைகளிலும், புதிய கண்டுபிடிப்புகளிலும் இந்திய மாணவர்கள் குறிப்பாக தமிழக மாணவர்கள் முன்னோக்கிச் செல்வார்கள் தாய் மொழிக் கல்வியை ஆதரித்தால்தான் ஒரு வலிமையான சமூகத்தை உருவாக்க முடியும்.

## மேற்கோள் நூல்கள்


1. வஜ்ரவேலு. 2009. அருந்தமிழ் கற்பிக்கும் முறைகள். சென்னை, அம்சா பதிப்பகம்.
2. இரத்தினசபாபதி. 2008. *கல்விவியல் தேர்வு*, சென்னை, சாந்தா பதிப்பகம்.
3. கோவிந்தராசன். 1990. *நற்றமிழ் பயிற்றலின் நோக்கமும் முறையும்*, சென்னை, சரஸ்வதி பதிப்பகம்.
4. சக்திவேல். 1964. தமிழ்மொழி வரலாறு, சென்னை.மீனாட்சி புத்தகாலயம்.
5. வேணுகோபால். 1991. பைந்தமிழ் கற்பிக்கும் முறைகள், வேலுர், சகுந்தலா வெளியீட்டகம்.
6. வீரப்பன். 2002. உயர்நிலைப் பள்ளியில் தமிழ் கற்பித்தல் மைசூரு, மண்டல கல்வியியல் நிறுவனம்.
7. தேசியக்கல்விக் கல்விக் கொள்கை, 2020. கல்வி அமைச்சகம், இந்திய அரசு.
8. வேணுகோபால். 2021. உயிரியல் கற்பித்தல், சென்னை. இராம் பதிப்பகம்.